

# பணியிடங்களில் பெண்கள்

ஆசீஸ் ராய்சூர்

இலவச விநியோகத்திற்கு மட்டுமே

ஆல் பீப்பிள்ஸ் சர்ச் & வேர்ல்ட் அவுட்ரீச், பெங்களூர், இந்தியா அச்சிட்டு விநியோகித்தது.
முதல் பதிப்பு அச்சிடப்பட்டது: ஜனவரி 2004
திருத்தப்பட்ட பதிப்பு: மே 2020
தமிழில் மொழியாக்கம்: ஜூன் 2021

தொடர்பு தகவல்:
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: bookrequest@apcwo.org
Website: **apcwo.org**

வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், அனைத்து வேத மேற்கோள்களும் புனித பைபிளான புதிய கிங் ஜேம்ஸ் பதிப்பிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. பதிப்புரிமை © 1982 தாமஸ் நெல்சன், இன்க்., அனுமதியால் பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.
விவிலிய வரையறைகள், ஹீப்ரு மற்றும் கிரேக்க சொற்கள் மற்றும் அவற்றின் அர்த்தங்கள் பின்வரும் ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்றன:

Thayer's Greek Definitions. Published in 1886, 1889; public domain.
Strong's Hebrew and Greek Dictionaries, Strong's Exhaustive Concordance by James Strong, S.T.D., LL.D. Published in 1890; public domain.
Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words, © 1984, 1996, Thomas Nelson, Inc., Nashville, TN.

**நிதி பங்குதாரர்**
ஆல் பீபிள்ஸ் சர்சீன உறுப்பினர்கள், கூட்டாளர்கள் மற்றும் நண்பர்களின் நிதி உதவி மூலம் இந்த வெளியீட்டின் உற்பத்தி மற்றும் விநியோகம் சாத்தியமானது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் வளப்படுத்தப்பட்டிருந்தால், ஆல் பீபிள்ஸ் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை தயாரித்து விநியோகிக்க உதவ நிதி ரீதியாக பங்களிக்க உங்களை அழைக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give ஐப் பார்வையிடவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு செய்வது என்பது குறித்து இந்த புத்தகத்தின் பின்புறத்தில் உள்ள “ஆல் பீபிள்ஸ் சுரச்சசுடனான கூட்டாளர்” பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**அஞ்சல் பட்டியலில்**
ஆல் பீபிள்ஸ் சர்ச்சிலிருந்தும் இலவச வெளியீடுகள் வெளியிடப்படும்போது அறிவிக்க, நீங்கள் apcwo.org இல் எங்கள் அஞ்சல் பட்டியலுக்கு குழுசேரலாம்.

# பணியிடங்களில் பெண்கள்

# பொருளடக்கம்

1. பெண்கள் வேலைக்குச் செல்வது சரியா? ..... 1

2. வெளியே வேலைக்கும் செல்லவேண்டும், குடும்பத்தையும் பராமரிக்க வேண்டும், சொந்த ஆவிக்குறிய வாழ்வையும் கவனிக்க வேண்டும், இவையனைத்தையும் சரிவரச் செய்வது எப்படி? ..... 13

3. பணியிடங்களில் சந்திக்கும் சவால்களை பெண்கள் எவ்வாறு கையாள்கிறார்கள்? ..... 19

4. கணவன், மனைவி இருவரும் சம்பாதிக்கும் குடும்பங்களில் உள்ள பிரச்சனைகளும், அவைகளை தவிர்த்தலும் ..... 24

# 1. பெண்கள் வேலைக்குச் செல்வது சரியா?

"பெண்கள் வேலைக்குச் செல்வது சரியா?" என்ற தலைப்பில் நான் முதலில் பேச விரும்பியபோது, "இந்த விஷயத்தைப் பற்றிப் பேச நீங்கள் தகுதிபெற்றவர் என்று எப்படி நினைக்கிறீர்கள்?" என்று என் மனைவி ஏமி என்னிடம் கேட்டாள். அதற்கு நான் அவளிடம், “இது குறித்த எனது அணுகுமுறை மிகவும் எளிது! ஏனெனில், ஆதியாகமம் முதல் வெளிப்படுத்துதல் வரை வேதாகமம் இதைப்பற்றி என்ற சொல்கிறது என்று படிக்கப் போகிறேன். அதன் அடிப்படியில் என் கருத்துக்களை மக்கள் முன் வைக்கப் போகிறேன். எனவே, நான் சொல்லப்போவது என் சொந்த கருத்து அல்ல, மாறாக, வேதாகமத்தின் அடிப்படையிலான என் கருத்து” என்று நான் அவளிடம் சொன்னேன். எனவே இப்போது நாம் எடுத்துக்கொண்டிருக்கும் இந்த தலைப்பை வேதாகம வெளிச்சத்தில் பார்த்து, அதை நம் வாழ்வில் எப்படிப் பயன்படுத்தலாம் என்று கற்றுக்கொள்வோம்!

பெண்கள் வேலைக்குச் செல்வது சரியானதா? என்பது பற்றி, மக்களுக்களிடம் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. சிலர், “சரி” என்றும், வேறு சிலர் “சரியில்லை! பெண்கள் வீட்டில்தான் இருக்க வேண்டும், வெளியே வேலைக்கு செல்லக்கூடாது” என்றும் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். தாங்கள் சொல்லும் கருத்துக்கள் சரியானதுதான் என்று, இரண்டு கூட்டத்தார்களும், வேதாகம வசனங்களைக்கூட மேற்கோள் காட்டலாம். அப்படியானால், பரிசுத்த வேதாகமம் உண்மையிலேயே என்ன சொல்கிறது என்று பின்வரும் பகுதிகளில் ஆராய்ந்து பார்க்கலாம்.

## பெண்கள் பற்றிய வேதாகமத்தின் பார்வை

**ஆதியாகமம் 2:18**
**பின்பு, நித்தியக் கடவுள் “மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல; ஆகவே அவனுக்குப் பொருத்தமான துணையை நான் உண்டாக்குவேன்” என்றார்.**

பெண் ஏன் படைக்கப்பட்டாள்? என்றால், பெண்ணை இரண்டு எளிய காரணங்களுக்காக கடவுள் படைத்தார். ஒன்று, துணைக்காக, இன்னொன்று, உதவிக்காக. பெண், ஆணுடைய “தேவையை சந்திப்பவள்” (help meet). எபிரேய மொழியில் இதன் பொருள் “எதிர் பகுதி” (opposite part) அல்லது “எதிர் தரப்பு” (counterpart). ஆகவே, பெண் ஆணின் அடிபணிந்த துணைப்பகுதியாக இருக்க உருவாக்கப்படவில்லை; மாறாக, ஆணுடைய எதிர்பகுதியாக அல்லது எதிர் பதமாக இருக்க உருவாக்கப்பட்டாள். அதாவது, இருவரும் சேரும்பொழுது ஒரு முழுமை, சமநிலை ஏற்படும்படியாக. ஆணும் பெண்ணும் இவ்வாறு சமமாக படைக்கப்பட்டனர். எனவே, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான உறவு இயற்கையில் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதையே நோக்கமாக கொண்டிருந்தது. அவர்கள் ஒருவருக்கொருவர் "உதவியாக மற்றும் துணையாக" இருக்கப் படைக்கப்படார்கள். ஆனால், வீழ்ச்சியின் போது, இவை அனைத்தும் மாறிவிட்டன.

**ஆதியாகமம் 3:16**
**பின்பு, கடவுள் அந்தப் பெண்ணிடம், "உன் கர்ப்ப காலத்தில், உன் வேதனையை மிகவும் அதிகரிக்கப்பண்ணுவேன்; நீ உன் கணவனை கட்டுப்படுத்த ஆசைப்படுவாய்; ஆனால், அவன் உன்னை ஆளுகை செய்வான்" என்றார்.**

கடவுள் ஆரம்பத்தில் ஆணையும் பெண்ணையும் சமமான இருவராகவே வடிவமைத்தார். ஆனால் வீழ்ச்சியின் நாளிலிருந்து பெண் ஆணுக்கு அடிபணிந்தாள்; அவளுடைய விருப்பமும் ஏக்கமும் கணவனை சார்ந்ததாக மாறியது. ஆகவே, அவன் அவளை ஆளுகை செய்தான். இவ்வாறு, மனுக்குலத்தின் வீழ்ச்சியின் காரணமாக, ஆண்களே ஆதிக்கம் செலுத்தும் வீழ்ச்சியடைந்த உலகத்தில் இன்று நாம் உள்ளோம். இது வீழ்ச்சியடைந்த நிலையே தவிர கடவுளுடைய படைப்பின் நோக்கம் அதுவல்ல. ஆனால் ஒரு நல்ல செய்தி என்னவென்றால், சிலுவை மரணத்தின் மூலம் மனுக்குலத்தை, கிறிஸ்து மீட்கும்பொழுது, பெண்ணை ஆணுக்கு சமமாக மீட்டெடுத்தார். கிறிஸ்துவால் மீட்கப்பட்டவர்களுக்குள், ஆண் பெண் என்ற பேதங்கள் இல்லை. அப்படிப்பட்ட நமக்குள், இஸ்ரவேல் சமுதாயத்தார்கள், மற்ற சமுதாயத்தார்கள் என்ற

வித்தியாசமோ; உயர்ந்தவர், தாழ்ந்தவர், பணக்காரர், ஏழை என்ற வித்தியாசமோ; ஆண்கள், பெண்கள் என்ற வித்தியாசங்கள்கூட இல்லாதபடி இயேசு கிறிஸ்துவுக்குள் ஒருவராகிறார்கள்" (கலாத்தியர் 3:28).

கிறிஸ்து மூலம் கடவுள் மனுக்குலம் மீது காட்டிய தயவினால், ஆணும் பெண்ணும் அவர் படைப்பில் சம வாரிசுகளாக இருக்கிறார்கள்.

**1 பேதுரு 3:7**
**அப்படியாக, கணவன்மார்களே! உங்களைப் போல, உங்கள் மனைவி பெலமுள்ளவள் இல்லை என்பதை உணர்ந்து, கடவுளிடமிருந்து உங்களுக்குக் கிடைத்த புதுவாழ்வில் அவளுக்கும் சமமான பங்கு உள்ளது என்பதை அறிந்து, அவளுக்கு கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுத்து, கடவுளிடம் நீங்கள் வேண்டுதல் செய்வதற்கு எந்தத் தடையும் வராதபடி வாழுங்கள்.**

கடவுளின் கண்ணோட்டத்திலும், காரியங்களிலும் பெண் என்பவள் ஆணுக்குச் சமமான ஒரு பகுதி என்பதை ஆண் இப்போது புரிந்து கொள்ள வேண்டும். இருப்பினும், பாவ சாபத்திலிருந்து முழுமையாக விடுவிக்கப்படாத இந்த உலகில், ஆண் ஆதிக்கம் உள்ள சமூகத்தையே இன்னும் நாம் பிரதானமாகக் காண்கிறோம். இந்த உலகம் இன்னும் முழுமையாக விடுவிக்கபடாததால், இந்த அமைப்புமுறை தொடர்கிறது.

## வேதாகமத்தின் பெண்கள்

வேதாகம ஆய்வில், வரலாறு முழுவதும் பார்க்கும்பொழுது, வீட்டு வேலைகளைத் தாண்டி, பெண்களை அவர்களின் திறனுக்கு ஏற்ப வெவ்வேறு நிலைகளில் கடவுள் பயன்படுத்தியிருப்பதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டுகள்:

### தீர்க்கதரிசி மிரியாம்

**யாத்திராகமம் 15:20**
**ஆரோனின் தங்கையான மிரியாமும், அவளோடு அநேக பெண்களும் தங்கள் கைகளில் மேளதாளங்களை எடுத்து, தாளம்போட்டுக்கொண்டு, ஆடிப்பாடிக் கடவுளைப் போற்றிப் புகழந்தார்கள். கடவுள் மனதில் உள்ளதை அறிந்து, மக்களுக்குப் புத்திசொல்லுகிறவளாகிய அந்த மிரியாம் பாடிய பாடல்...**

## கடவுளை வணங்கும் கூடாரத்தை கட்ட பெண்கள் உதவினார்கள்

**யாத்திராகமம் 35:22,25-26**
**22 கடவுளுக்குக் காணிக்கை கொடுக்க விரும்பிய ஆண்களும், பெண்களும் தங்க ஊசிகள், தங்க கம்மல்கள், தங்க மாலைகள், தங்க வளையல்கள், தங்க மோதிரங்கள் போன்ற விலையுயர்ந்த பலவித தங்க ஆபரணங்களைக் காணிக்கைகளாக கொண்டுவந்தார்கள்.**
**25 கைத்தறி ஆடைகளை தயாரிக்கும் திறமையுள்ள பெண்கள் நீலம், சிவப்பு, சிவப்புக் கலந்த நீலம் போன்ற நூல்களைக் கொண்டுவந்து கொடுத்தார்கள்.**
**26 அதுபோலவே, எந்தெந்த பெண்களுக்கெல்லாம் ஆடு முடிகளை நூல்களாக நூற்க்கும் திறமையை கடவுள் கொடுத்திருந்தாரோ அவர்கள் அனைவரும், அந்த நூல்களைத் தயாரித்துக்கொடுத்தார்கள்.**

## கடவுளின் வார்த்தையை பெண்களும் கற்பிக்க வேண்டும் என்பதே அவர் விருப்பம்

**உபாகமம் 31:12**
**ஆண்கள், பெண்கள், பிள்ளைகள், மற்றும் உங்கள் ஊரில் வசிக்கும் மற்ற சமுதாய மக்கள் என அனைவரையும் கூப்பிட்டு, கடவுள் சொல்லிக்கொடுத்த நீதி நியாயங்களை எல்லாம் அவர்களுக்குச் சொல்லிக்கொடுங்கள். ஏனெனில், அவைகளை அவர்கள் கேட்டு, கடவுளுக்குப் பயந்து, அதின்படி எப்படி வாழவேண்டும் என்று அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.**

## தெபோராள்

அந்த காலகட்டத்தில், லபிதோத் என்பவரின் மனைவியாகிய தெபோராள் என்பவள், கடவுள் மனதில் உள்ளவைகளைத் தெரிந்து, இஸ்ரவேல் சமுதாய மக்களின் நீதி நியாங்களை விசாரணை செய்து, பிரச்சனைகளை தீர்த்து வந்தாள் (நியாயாதிபதிகள் 4:4).

## யாகேல்

இல்லத்தரசியான யாகேல் என்ற பெண், ஒரு மனிதனின் தலையில் ஆணியைப் பாய்ச்சி இஸ்ரேல் சமுதாய மக்களுக்கு ஒரு மகத்தான வெற்றியைத் தேடிக் கொடுத்தாள் (நியாயாதிபதிகள் 4:21).

## எருசலேமின் சுவர்களை புனரமைக்க கடவுள் பெண்களைப் பயன்படுத்தினார்

**நெகேமியா 3:12**
**எருசலேமின் பாதி நகரத்திற்கு அலோகேஸ் என்பவன் தலைவனாக இருந்தான். அவனுடைய மகன் சல்லூம் என்பவனும், அவனுடைய மகள்களும் சேர்ந்துதான் அந்தப் பகுதியில் இடிந்துகிடந்த பாதுகாப்புச் சுவர்களைச் சீர்படுத்திக் கட்டினார்கள்.**

## எஸ்தர்

எஸ்தர் என்ற ஒரு ராணி மூலம்தான் இஸ்ரவேல் சமுதாய மக்கள் தங்கள் எதிரிகளிடமிருந்து விடுதலை பெற முடிந்தது.

## இயேசுவுக்கு, பெண்களும் ஊழியம் செய்தார்கள்

இயேசுவுக்கு ஊழியம் செய்த பெண்களைப் பற்றி புதிய ஏற்பாட்டிலும் நாம் வாசிக்கிறோம்

**மாற்கு 15:41**
**இவர்கள் அனைவரும் இயேசு கலிலேயாவில் இருந்தபொழுது, அவருக்கு உதவிசெய்து அவரோடு சேர்ந்திருந்தவர்களாகும். இவர்கள் அல்லாது மேலும் சில பெண்களும் இயேசுவோடு சேர்ந்து எருசலேம் நகரத்திற்கு வந்திருந்தார்கள்.**

**லூக்கா 8:1-3**
**1 அதற்குப் பின்பு இயேசு தன்னுடைய 12 சீடர்களோடு, பல்வேறு கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் சென்று, கடவுளுடைய நாட்டைப் பற்றியும், அவருடைய ஆளுகையைப் பற்றியுமான நல்ல செய்தியை சொல்லி வந்தார்.**
**2 மனிதர்களுக்குக் கெடுதலை விளைவிக்கும் பேய்களின் பிடிகளிலிருந்து இயேசுவால் விடுதலை பெற்ற சில பெண்களும், அவரால் நோய்கள் நீங்கி குணமான சில பெண்களும், ஏழு பேய்களின் பிடியில் வாழ்ந்து, அவைகளிடமிருந்து அவரால் விடுதலை பெற்ற மகதலேனா ஊரைச் சார்ந்த மரியாளும்;**
**3 ஏரோது ராஜாவின் அரண்மனையில் அதிகாரியாக வேலை செய்த கூசா என்பவரின் மனைவி, யோவன்னாளும், சூசன்னாள் போன்ற மேலும் பல பெண்களும் இயேசுவுக்கும் அவருடைய சீடர்களுக்கும் பொருளுதவிகள் செய்து வந்தார்கள்.**

## லீதியாள்

**அப்போஸ்தலர் 16:14**
**அவ்வாறு, நாங்கள் பேசுவதை கேட்டுக்கொண்டு இருந்த ஒரு பெண்ணின் பெயர், லிதியாள். அவள் தியாதிரா ஊரைச் சேர்ந்தவள், கடவுள் மீது பக்தியுள்ளவள். சிவப்பும் நீல நிறமும் கலந்த விலை உயர்ந்த துணி விற்பனை செய்கிறவள், அவள். பவுல் சொல்வதை ஏற்றுக்கொள்ளும்படியாக, கடவுள் அவள் உள்ளத்தைத் தூண்டினார்.**

பிலிப்பு நகரத்தில் சிவப்பு நீல நிற விலையுயர்ந்த துணி வியாபாரம் செய்யும் ஒரு தொழில் அதிபதி, லீதியாள். அவள் தன் வீட்டில் திருச்சபை மக்கள் சேர்ந்து ஆராதிக்க கடவுள் அவளை பயன்படுத்தினார். "பின்பு, பவுலும் சீலாசும் சிறையிலிருந்து வெளியேறி, லீதியாள் வீட்டிற்குப் போய்த் தங்கி, அந்த நகரில் இயேசுவை நம்பி வாழ்ந்தவர்களோடு, "இயேசு மூலம் கடவுள் செய்ததை நீங்கள் உறுதியாக நம்பி வாழுங்கள்" என்று புத்திசொன்னார்கள். பின்பு, அந்த பிலிப்பி நகரைவிட்டுக் கிளம்பிப் போனார்கள்" (அப்போஸ்தலர்கள் 16:40).

## ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லா

**அப்போஸ்தலர்கள் 18:1-4**
**1 அதற்குப் பிறகு, பவுல் அத்தேனே நகரத்திலிருந்து கிளம்பி, கொரிந்து நகருக்குப் போனார்.**
**2 அந்தக் கொரிந்து நகரில் வாழ்ந்து வந்த, ஆக்கில்லாவையும் அவருடைய மனைவி பிரிஸ்கில்லாவையும் அங்கு பவுல் சந்தித்தார். அவர்கள் பொந்து நகரைச் சேர்ந்த யூதர்களாகும். இத்தாலி நாட்டிலுள்ள, ரோம் நகரத்தில் வசிக்கிற, யூதர்கள் அனைவரும் தங்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குப் போகவேண்டும் என்று கிலாவுதிய இராஜா கட்டளை போட்டபடியால், அவர்கள் அங்கிருந்து வந்து, கொரிந்து நகரில் தங்கியிருந்தார்கள். பவுல் அவர்கள் வீட்டுக்குப் போனார்.**
**3 அவர்கள், கூடார வீடுகள் செய்யும் தொழில் செய்து வந்தபடியாலும், பவுலுக்கும் அந்தத் தொழில் தெரிந்திருந்தபடியாலும், பவுல், அவர்களோடு தங்கி, ஒன்றாகத் தொழில் செய்து வந்தார்.**
**4 யூதர்கள் ஓய்ந்து இருக்கும் ஒவ்வொரு வார நாட்களிலும், கடவுளை வணங்க அவர்கள் கூடிவரும் இடத்திற்குப் பவுல் போய், அங்கு வரும் யூதர்களிடமும், மற்ற சமுதாய மக்களிடமும், இயேசுவை நம்பி வாழும்படி புத்திசொல்லி வந்தார்.**

ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் கூடாரம்செய்யும் தொழில் செய்துவந்தனர். பவுலின் ஊழியத்தில் பங்காளர்களாக இருந்த ஒரு

வணிக தம்பதியாக அவர்கள் இருந்தார்கள். ஆகவே, குறைந்த பட்சம் மூன்று இடங்களில் பவுல் அவர்களை தனது சக வேலைக்காரர்கள் என்று குறிப்பிடுகிறார் (ரோமர் 16:3; 1 கொரிந்தியர் 16:19; 2 தீமோத்தேயு 4:19)

## பெபேயாள், யூனியா மற்றும் இதர பெண்கள்

**ரோமர் 16:1-7**

**1 பெபயாளைப் பற்றி நான் கூறுவது என்னவென்றால், இயேசு கிறிஸ்துவால் சகோதரியான அவளை நான் அனுப்புகிறபடியால், என்னை ஏற்றுக்கொள்வது போலவே, அவளையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். அவள், கெங்கிரேயா ஊரில் கூடிவரும் திருச்சபை மக்களுக்கு உதவிசெய்கிறாள்.**
**2 ஆகவே, அவள் கடவுளுக்கு உரியவளானபடியாலும், இயேசு கிறிஸ்து செய்த செயல் மூலம், கடவுளால் உங்களைச் சுத்தமானவர்கள் என அறிவித்தபடியாலும், அவளை நீங்கள் ஏற்றுக்கொள்ளுங்கள். அதுமாத்திரமல்ல, அவளுக்கு என்னென்ன தேவைகள் உள்ளதோ, அவைகள் அனைத்தையும் செய்துகொடுங்கள். ஏனெனில், அவள் அநேகருக்கு பல்வேறு உதவிகளைச் செய்தவள்; எனக்கும் அவள் பல உதவிகளைச் செய்திருக்கிறாள்.**
**3 அதுமாத்திரமல்ல, என்னோடு சேர்ந்து இயேசு கிறிஸ்துவிற்கு வேலைசெய்த பிரிஸில்லாவையும், அவள் கணவன் ஆக்கில்லாவையும் நான் கேட்டதாகச் சொல்லுங்கள்.**
**4 அப்பொழுது, என் உயிரைக் காப்பாற்றுவதற்காக, அவர்கள் இருவரும் ஆபத்தைச் சந்திக்க நேர்ந்தது ஆகவே, நான் மட்டுமல்ல, இஸ்ரவேலர்கள் அல்லாத அனைத்து சமுதாய மக்கள் மத்தியிலுள்ள பல்வேறு திருச்சபை மக்கள் அவர்களுக்கு நன்றி கூறுகிறார்கள்.**
**5 அவர்கள் வீட்டில் ஒரு சபையாக கூடிவருகிற மக்களை நான் கேட்டதாகச் சொல்லுங்கள். எனக்கு நெருங்கிய நண்பனான எப்பானாத்தை நான் கேட்டதாகச் சொல்லுங்கள். ஆசியா மைனர் நாட்டில் நான் கடவுளுக்கு வேலை செய்தபொழுது அவர்தான் முதன்முதலாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவராகும்.**
**6 உங்களுக்காக கடினமாக கடவுளுக்கு வேலை செய்த மரியாளையும் நான் கேட்டதாகச் சொல்லுங்கள்.**
**7 எனக்கு முன்பாகவே இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட என்னுடைய சமுதாயத்தைச் சேர்ந்த அன்றோனீக்கையும், அவர் மனைவி யூனியாளையும், நான் கேட்டதாகச் சொல்லுங்கள். அவர்கள் இருவரும் அப்போஸ்தலர்களால் மிகவும் போற்றப்படுகிறவர்கள் ஆகும். அதுமாத்திரமல்ல, அவர்கள் என்னோடு கூட சிறையில் இருந்தவர்களாகும்.**

பெபேயாள், தேவாலயத்தின் போதகருக்கு அடுத்த நிலையிலும் தேவாலயத்தின் சில வணிகங்களுக்கு பொறுப்பாகவும் இருந்தாள்.

யூனியா, ஒரு பெண் அப்போஸ்தலர். பவுலுடன் ஒரு சக ஊழியக்காரியாக இருந்தாள். பவுலுடன் சேர்ந்து தேவனுக்கு ஊழியம் செய்ததில் மற்ற பெண்களும் இருந்தார்கள். அவர்களை பவுல், "நற்செய்தி பணியில் என்னுடன் உழைத்த பெண்கள்" என்று குறிப்பிட்டுள்ளார் (பிலிப்பியர் 4:3).

பண்டைய கால பாரம்பரியமான குடும்ப அமைப்பின் சூழலிலும், வெளியே பெண்களைப் பயன்படுத்துவதன் மூலம் கடவுள் தனது வேலையில் அவர்களை எவ்வாறு ஈடுபடுத்தினார் என்பதற்கான ஒரு பார்வை தான் இது.

# ஒரு பெண்ணின் முதன்மை அழைப்பு

ஒரு பெண்ணின் முதன்மை அழைப்பு கணவருக்கு நல்ல மனைவியாகவும், குழந்தைகளுக்கு ஒரு நல்ல தாயாகவும், இல்லரத்தை காத்துக்கொள்வதும் தான் என்பதில் வேதாகமம் மிகவும் தெளிவாக உள்ளது.

**1 தீமோத்தேயு 5:14**
**ஆகவே, அப்படிப்பட்ட இளம்வயது விதவைகள் மறுமணம் பண்ணி, பிள்ளைகளைப் பெற்றெடுத்து, அவர்களைப் பொறுப்போடு வளர்ப்பது நல்லது என்று அவர்களுக்குப் புத்தி சொல். அப்பொழுது, அவர்களை வெறுக்கிறவர்களால், அவர்கள் மீது வீணான பழிச்சொல் வராது.**

'ஒய்கொடெஸபொடொ என்ற கிரேக்க பதத்திற்கு "குடும்பத்தை வழிநடத்துங்கள்" அல்லது குடும்பத்தின் தலைவியாக ஆளுகை செய்ய வேண்டும் என்பதாகும்.

**தீத்து 2:4-5**
**4 மேலும் அவர்கள் வாழ்வு இளம் பெண்களுக்கு மாதிரியாய் இருக்கும்படி புத்திசொல்லு. எப்படியென்றால், நல்லது எது? கெட்டது எது? என்பதை அவர்கள் புரிந்து, தங்கள் வாழ்வை சுத்தமாக காத்துக்கொள்ளவும், தங்கள் கணவனையும், பிள்ளைகளையும் நேசித்து, தங்கள் குடும்பத்தார்களை நன்கு பராமறிக்கத்தக்கதாகவும், பெண்கள் தங்கள் கணவன்மார்களை நேசித்து, கணவன்மார்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வாழவும், நாம் சொல்லிக் கொடுக்கிறபடி கடவுளைப் பற்றிய உண்மைகளின்படி அவர்கள் தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ளவும் புத்திசொல்லு.**
**5 இல்லையேல், மற்றவர்கள் அவர்கள் வாழ்வைப் பார்த்து நாம் சொல்லிக்கொடுக்கும் கடவுளுடைய உண்மைகளை ஏளனம் செய்யக்கூடும்.**

“ஒய்கொஸ்” என்ற கிரேக்கச் சொல்லிற்கு “வசிப்பிடம் அல்லது குடும்பம்” என்றும் “யுரோஸ்” என்ற கிரேக்கச் சொல்லிற்கு “காவலர் அல்லது பராமரிப்பாளர்” என்றும் அர்த்தமாகிறது. ஆகவே, “ஒய்கொரொஸ்” என்ற கிரேக்கச் சொல்லிற்கு “குடும்ப பராமரிப்பாளர்” என்று அர்த்தமாகிறது.

எனவே, ‘ஒய்கொரொஸ்’ என்றால், வீட்டில் தங்கியிருபவர், அதாவது, வீட்டைச் சார்ந்திருப்பவர் அதாவது, நல்ல ஒரு குடும்பக்காப்பாளர், குடும்ப பராமரிப்பாளராகும்.

பெண் தனது குடும்ப விவகாரங்களை நிர்வகிக்க வேண்டும் அதாவது வீட்டை வழிநடத்துபவராக இருக்க வேண்டும். ஆகவே, வெளியே வேலைக்குச் சென்றாலும், சரியான சமநிலையில் அவள் தன் குடும்பத்தையும் பராமரிக்க வேண்டும். அப்படியென்றால் ஒரு பெண் வெளியே வேலைக்குச் செல்வது சரியானதா...? என்றால், பதில் “ஆம்” என்பதாகும்.

# பணியிடத்தில் பெண்கள் இருப்பது குறித்துப் பார்க்கலாம்

- பெண்கள் வெளியே வேலைக்குச் செல்லக்கூடாது இருக்கக்கூடாது என்று வேதாகமத்தில் எங்கும் திட்டவட்டமாகக் கூறவில்லை. வேதாகமத்தை விளக்கும்பொழுது, வேதாகமத்தில் ஏதாவது ஒரு பகுதியில் ஒரு செயலை வெளிப்படையாக மறுக்கவில்லை என்றால், அந்த செயலோடு தொடர்புடைய மற்ற வேதவசனங்களின் அடிப்படையில், அந்த செயலுக்கான அனுமதியைக் கடவுள் தருகிறார் என்று அர்த்தம்.

உதாரணமாக, "நான் உன்னை குணமாக்குகிற கர்த்தர்" என்று கடவுள் சொன்னார், ஆனால் மருந்துகளை உட்கொள்வதையோ அல்லது மருத்துவரிடம் செல்வதையோ தவிர்க்கும்படி அவர் நம்மிடம் சொல்லவில்லை. ஆனால் சிலர் அதை தவறாகப் புரிந்து கொண்டு வேறு விளக்கம் அளிப்பர். குணமடைய நாம் கடவுளைப் நோக்கிப் பார்க்க வேண்டும். ஆனால், அதேவேளையில் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது மருந்துகளை உட்கொள்வது

அல்லது மருத்துவரைச் சந்திப்பது தவறல்ல. அதேபோல், ஒரு பெண்ணின் முதன்மை அழைப்பு தன் கணவனுக்கு மனைவியாகவும், குழந்தைகளுக்கு ஒரு தாயாகவும், வீட்டைப் பராமரிப்பவளாகவும் இருக்க வேண்டும் என்று கடவுள் சொல்லியுள்ளார். ஆனால், பெண் வணிகத்திலோ, வெளியே வேலைக்குச் செல்லவோ கூடாது என்று அவர் எங்கும் சொல்லவில்லை. எனவே வேத வசனங்களுக்கு தவறான விளக்கங்களைக் கொடுக்காதீர்கள்.

- கிருபையின் வரங்களைக் கடவுள் நமக்குக் கொடுக்கும்பொழுது ஆண் பெண் என்ற வித்தியாசம் பார்த்துக் கொடுப்பதில்லை

**ரோமர் 12:6-8**
**6 மேலும், நம் ஒவ்வொருவர் மீதும் கடவுள் காட்டுகிற தயவுயின்படி, வெவ்வேறு வேலைகளையும், திறமைகளையும் வரமாக தந்துள்ளார். ஆகவே, ஒருவருக்குக் தன்மீது எந்த அளவு கடவுள் நம்பிக்கையை தந்துள்ளாரோ, அந்த அளவு அவர் கடவுளுடைய மனதை அறிந்து, மக்கள் எப்படி வாழவேண்டும் எனச் சொல்லிக்கொடுக்கிற வேலையைச் செய்யவேண்டும்.**
**7 உதவியற்றவர்களுக்கு உதவி செய்கிறவரும் தன் வேலையை அவ்வாறே செய்யவேண்டும்; கடவுளுடைய வார்த்தைகளைச் சொல்லிக்கொடுக்கிற வேலை செய்கிறவரும் அவ்வாறே மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும்:**
**8 சோர்வோடு இருக்கிறவர்களை உற்சாகப்படுத்துகிறவரும் அவ்வாறே, உற்சாகப்படுத்த வேண்டும்; தங்களுக்குறியவைகளை மற்றவர்களுக்கு கொடுத்து உதவுகிறவர்களும், அவ்வாறே தாராளமாகக் கொடுத்து உதவிசெய்ய வேண்டும். கடவுளுடைய காரியத்தில் மக்களை வழிநடத்துகிறவர்களும் அவ்வாறே பொறுப்போடு மற்றவர்ளை வழிநடத்த வேண்டும். அதுபோலவே, இரக்கம் காட்டுகிறவர்களும், சந்தோசத்தோடு மற்றவர்களுக்கு இரக்கம் காட்டவேண்டும்.**

தலைமைப் பொறுப்பு, நிர்வாகப் பொறுப்பு, கற்பித்தல், தீர்க்கதரிசனம் சொல்லுதல் மற்றும் பண உதவிகள் சம்பந்தமான திறன்களைக் கொண்ட பெண்கள் நிச்சயம் இருப்பார்கள். இந்த வரங்களை ஆண்களுக்கு மட்டும் என ஆண்டவர் கொடுக்கவில்லை. மேலும், இந்த வரங்களில் ஒன்றாவது பெண் வீட்டிற்கு வெளியே வேலை செய்யும் இடங்களில் பயன்படுத்த வேண்டியது தேவ நோக்கமாக இருக்கும்.

நீதிமொழிகள் 31 இல், ஒரு பெண் தனது திறமைகளை வீட்டிற்குள்ளே மட்டுமல்ல, வீட்டிற்கு வெளியே வேலை செய்யும் இடத்தில் பயன்படுத்துவதையும் பார்க்கிறோம். அவற்றில் சில வணிகத்தில் அவள் ஈடுபடுவதையும் தெளிவாகக் காணலாம். ஏனென்றால், அதைச் செய்ய அவளுக்குரிய வரங்கள் கடவுளால் அவளுக்குப் பரிசாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

**நீதிமொழிகள் 31:16,19,24**
**16 ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள்; தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சத்தோட்டத்தை நாட்டுகிறாள்.**
**19 தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள்; அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும்.**
**24 மெல்லிய புடவைகளை உண்டுபண்ணி விற்கிறாள்; கச்சைகளை வர்த்தகரிடத்தில் ஒப்புவிக்கிறாள்.**

- **ஒரு குடும்பத்தில் ஆண் தனது பொறுப்பை கைவிட்டுவிட்ட சூழ்நிலை**

ஒருவேளை ஒரு குடும்பத்தின் ஆண், இல்லாமலோ, காணாமலோ போயிருக்கலாம். அதுபோன்ற சந்தர்ப்பங்களில், அந்த பெண்ணுக்கு குழந்தைகள் இருந்தால் அவர்களை கவனிக்க வேண்டும், குடும்பத்தை வழிநடத்தி செல்வதற்கான சுதந்திரத்தை பெற்று, வெளியே வேலைக்குச் செல்லவும், சம்பாதிக்கவும், பிள்ளைகளை வழிநடத்தவும், வீட்டை நிர்வகிக்கவும் வேண்டியது உள்ளது. “ஆகவே, அப்படிப்பட்ட இளம்வயது விதவைகள் மறுமணம் பண்ணி, பிள்ளைகளைப் பெற்றெடுத்து, அவர்களைப் பொறுப்போடு வளர்ப்பது நல்லது என்று அவர்களுக்குப் புத்தி சொல். அப்பொழுது, அவர்களை வெறுக்கிறவர்களால், அவர்கள் மீது வீணான பழிச்சொல் வராது” (1 தீமோத்தேயு 5:14) என்று, அந்தப் பெண்ணுக்கு நாம் பவுலின் அறிவுறுத்தலை மேற்கோள் காட்ட முடியாது. அவள் வீட்டில் தங்கியிருந்து காக்கைகளால் போஷிக்கப்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவும் முடியாது!

- நிதி நிலைமை காரணமாக பெண் வெளியே வேலைக்குச் செல்ல நேரிடலாம்

கணவர் வீட்டில் இருக்கிறார், ஏதோ காரணத்திற்காக வேலைக்கு போவதில்லை அல்லது அவர் சம்பாதிப்பது வீட்டிற்கு போதுமானதாக இல்லாவிட்டால், அந்தப் பெண் வெளியே

வேலைக்குச் சென்று குடும்பத்தின் நிதி தேவையை சமாளிக்கவும் வீட்டை நிர்வகிக்கவும் வேண்டியிருக்கும்.

**இதின் அடிப்படையில் உங்கள் கருத்து என்ன?**

1. ஒரு பெண் வெளியே வேலைக்குச் செல்வது சரியானதுதான் என்று நீங்கள் எப்படி முடிவுக்கு வருவீர்கள்?

# 2. வெளியே வேலைக்கும் செல்லவேண்டும், குடும்பத்தையும் பராமரிக்க வேண்டும், சொந்த ஆவிக்குறிய வாழ்வையும் கவனிக்க வேண்டும், இவையனைத்தையும் சரிவரச் செய்வது எப்படி?

குடும்பம், வேலை மற்றும் அவர்களின் சொந்த ஆவிக்குறிய வாழ்வு இவையனைத்தையும் சரிவரச் செய்வதில், ஆண்களை விட வெளியே வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு பெரிய சவாலாக இருக்கிறது. ஆண்கள் வேலையை முடித்து வீடு திரும்புகிறார்கள், அதோடு அவர்களது அன்றைய வேலை முடிகிறது. ஆனால் வேலைக்குச் செல்லும் பெண் வெளியே சென்று வேலை செய்வது மட்டுமல்லாமல், வீடு திரும்பியதும் தனது கணவர் மற்றும் குழந்தைகளுக்கும் வேலை செய்யவேண்டியது உள்ளது.

## கடவுள் பெண்களையும் அவர்களின் தனித்துவத்தையும் மதிக்கிறார்

பெண்கள் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும், பாலின வேறுபாட்டை கடந்து கடவுள் அவர்கள் ஒவ்வொருவரையும் மதிக்கிறார். ஆதியாகமம் 3:16 ன் படி, மனுக்குல வீழ்ச்சியில் கிடைத்த சாபங்களில் ஒன்று, பெண்ணின் ஆசை தன் கணவனை பற்றியிருக்கும். அதன் விளைவாக, ஒவ்வொரு பெண்ணும் தனது அடையாளத்தின் ஆதாரமாக கணவனையே பார்க்கிறாள். அவள் இயல்பாகவே அவனின் பெயரை தனது கடைசி பெயருடன் இணைத்துக் கொள்கிறாள். அவளுடைய சுய மதிப்பு உட்பட அவளுடைய முழு உலகமும் பொதுவாக அவனிடமிருந்து வருகிறது.

பெண்களே, நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் கணவன் மீதுள்ள பார்வையை எடுத்து, உங்கள் பார்வையை கடவுள் மீது செலுத்துங்கள். ஏனென்றால் அவர் உங்கள் ஒவ்வொருவரையும்

தனித்தனியாக மதிக்கிறார். உங்கள் வாஞ்சை கடவுளை நோக்கி இருப்பதாக. உங்கள் மதிப்பு மற்றும் அடையாளத்திற்காக அவரை நோக்கிப் பாருங்கள்.

**1 கொரிந்தியர் 11:3,11-12**
**3 மேலும், இயேசு கிறிஸ்துவிற்கு கடவுள் தலையாக இருக்கிறதுபோல, திருமணமான ஒவ்வொரு பெண்களுக்கும், அவர்கள் கணவனே தலையாக இருக்கிறார் என்ற உண்மையை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள விரும்புகிறேன்.**
**11 இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்துவுக்குள் வாழ்கிற, ஆணிற்கு பெண்ணின் உதவியும்; பெண்ணிற்கு ஆணின் உதவியும் தேவை இருக்கிறது.**
**12 எப்படியெனில், முதல் பெண், ஒரு ஆணிலிருந்து படைக்கப்பட்டான்; ஆனால், அதன் பின்பு பிறக்கும் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அனைவரும் பெண்ணிலிருந்தல்லவா பிறக்கிறார்கள்? ஆகவே, ஆணாகப் பிறந்தாலும், பெண்ணாகப் பிறந்தாலும், நாம் அனைவருமே கடவுளுக்குரியவர்கள்.**

ஒரு மனிதன் தான் மனமுவந்து தன்னை கிறிஸ்துவின் தலைமையின் கீழ் கொண்டுவருவதை போல, அல்லது கிறிஸ்துவைப் போல, அவர் பிதாவுக்கு சமமானவராக இருந்தாலும், இந்த பூமிக்கு வந்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற மனமுவந்து தன்னை பிதாவுக்கு கீழ்ப்படித்தினார், அதேபோல் ஒரு பெண்ணும் மனமுவந்து தன்னைக் கணவரின் தலைமைக்கு கீழ் கொண்டுவரலாம். இது எந்த வகையிலும் அவள் யார் என்பதைக் குறைத்துக்காட்டாது, அல்லது அது அவளை ஆணுக்கு முன் தாழ்ந்தவளாக்காது. ‘இயேசு கிறிஸ்துவுக்குள் வாழ்கிற, ஆணிற்கு பெண்ணின் உதவியும்; பெண்ணிற்கு ஆணின் உதவியும் தேவை இருக்கிறது (1 கொரிந்தியர் 11:11). ஆணும் பெண்ணும் தங்களின் வாழ்விற்கான அடையாளம் மற்றும் எல்லாவற்றையும் கடவுளிடமிருந்துதான் பெறுகிறார்கள்!

## உங்கள் முதன்மையான அன்பு கடவுள் மீது இருக்கட்டும்

பெண்களே, உங்கள் முதல் அன்புக்குரியவர் உங்கள் கணவர் அல்ல! கடவுளுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதே உங்கள் முதன்மை நோக்கமாக இருக்கட்டும்.

**லூக்கா 10:38-41**
**38 அவ்வாறாக இயேசுவும், அவருடைய சீடர்களும் எருசலேம் நகரை நோக்கிப் பயணம் பண்ணும்பொழுது, எருசலேம் நகருக்கு அருகில் இருந்த**

**ஒரு கிராமத்திற்கு வந்தார்கள். அங்கே, மார்த்தாள் என்பவள் இயேசுவை தன் வீட்டுக்குவரும்படி கூப்பிட்டாள்.**
**39 அவளுக்கு மரியாள் என்ற ஒரு தங்கை இருந்தாள். மார்த்தாள் விருந்தாளிகளை உபசரிக்க பல வேலைகளைச் செய்துகொண்டு இருக்கும்பொழுது, அவள் தங்கை மரியாளோ, இயேசுவின் காலடியில் உட்கார்ந்து, அவர் பேசுகிறவைகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.**
**40 அப்பொழுது, வீட்டு வேலைகள் ஏராளம் இருந்தபடியால், மார்த்தாள் கஷ்டப்பட்டு ஒவ்வொரு வேலைகளாக செய்து, வேலைகள் முடிவடையாமல், சோர்வடைந்தவளாக, இயேசுவிடம் வந்து, "நான் ஒருத்தியாக இவ்வளவு வேலைகளையும் செய்து கொண்டிருக்கிறேன்; இவள் இங்கே சும்மா உட்கார்ந்து இருக்கிறாளே? எனக்கு உதவிசெய்ய இவளை அனுப்பவேண்டும் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?" என்றாள்.**
**41 அதற்கு இயேசு, "மார்த்தாளே, மார்த்தாளே, எத்தனையோ காரியங்களைக் குறித்த கவலைகள், உன் மனதில் நிறைந்து காணப்படுகிறது;**

மேற்கண்ட இந்த வசனங்களின்படி, மார்த்தாள் ஒரு வழக்கமான இல்லத்தரசி. சமையல்களையும் மற்ற எல்லா வேலைகளையும் செய்து இயேசுவுக்கும் சேவை செய்வதில் கவனம் செலுத்துகிறாள். ஆனால் இயேசு அவளை நோக்கி, “மரியாள் என் பாதபடியில் அமர்திருப்பதை போல, நீயும் வந்து நிதானமாக என் அருகில் உட்கார்” என்று சொல்கிறார். பெண்களே! நீங்கள் ஒரு “மார்த்தாள்”ஆக இருப்பதற்கு முன்பு “மரியாள்” ஆக இருக்க வேண்டும். நிச்சயமாக, நீங்கள் மரியாளைப் போல இயேசுவின் காலடியில் உட்கார்ந்துகொண்டு வீட்டு வேலையைச் செய்ய, உங்கள் கணவரை மார்த்தாள் ஆக்க வேண்டும் என்பது இதன் அர்த்தம் அல்ல. அப்படி இருந்தால் நீங்கள் உங்கள் பொறுப்பில் தோல்வியடைகிறீர்கள் என்பதாகும். நீங்கள் “மரியாள்” ஆகவும் இருக்க வேண்டும், “மார்த்தாள்“ஆகவும் இருக்க வேண்டும்.

## தாய், மனைவி, மற்றும் இல்லத்தரசியாக உங்கள் முதன்மை அழைப்பை ஆர்வமாய்ச் செய்யுங்கள்

வெளியே வேலைக்குச் செல்லும் பல பெண்களுக்கு இது ஒரு பெரிய சவாலாக இருக்கும். அலுவலகத்தில், பெண்கள் தங்கள் பணிக்காக ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் சம்பளம் பெறுகிறார்கள் மற்றும் வெகுமதிகள், அங்கீகாரம் அல்லது பதவி உயர்வு ஆகியவற்றைப் பெறுகிறார்கள். இது அவர்களுக்கு ஏதோ சாதித்த உணர்வைத் தருகிறது. மறுபுறம், வீட்டில், பெண்களுக்கு

இவை எதுவும் கிடைக்காது. ஆனால் இந்த முதன்மை அழைப்பில் பெண்கள் தோல்வியுற்றால், பணியிடத்தில் வெற்றி என்பது வீண்.

குறிப்பு: கண்டிப்பாக, நீங்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால், இது உங்களுக்குப் பொருந்தாது. அல்லது நீங்கள் திருமணமாகி பல ஆண்டுகளாயிருந்தால், இதை நீங்கள் ஏற்கனவே நிறைவேற்றியிருக்கலாம்.

## கிறிஸ்துவின் சரீரத்தில் உங்களின் அழைப்பின் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

பெண்களே, உங்கள் பணியிடங்களின் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு முன்பு, ஒவ்வொரு பெண்ணுக்கும் கிறிஸ்துவின் சரீரத்தில் இடம் உண்டு என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். பெண்களில் பலர் அதை புறக்கணிக்கிறார்கள் அல்லது மறந்துவிட்டு வேலைக்கு விரைந்தோடுகிறார்கள். கிறிஸ்துவின் சரீரத்தில் இன்று காணாமல் போன பல தாய்மார்கள் உள்ளனர். இளைய பெண்களுக்கு பரிசுத்த முன்மாதிரியாக இருக்க வேண்டிய மூத்த பெண்கள் வெளியில் வேலைக்கு விரைவதால் கடவுளின் வீட்டில் அவர்களை காணவில்லை. ஒவ்வொரு பெண்ணுக்கும் கிறிஸ்துவின் சரீரத்தில் கடவுளால் நியமிக்கப்பட்ட ஊழியம் உள்ளது. கிறிஸ்துவின் உடலில் உங்கள் ஊழியம் எது என்று கண்டுபிடித்து அதை நிறைவேற்றுங்கள்!

## நடைமுறை புத்திமதிகள்

- உங்கள் இதயம் எங்கே அதிகம் சார்ந்து இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்–உங்கள் இருதயம் வீட்டுப் பொறுப்பில் திருப்தி அடைந்தால், அதில் தவறில்லை. உங்கள் இருதயம் பணியிடத்தில் ஒரு அடையாளத்தை உருவாக்க வாஞ்சித்துக் கொண்டு இருந்தால், ஒருவேளை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று இது.
- உங்களுக்குக் கடவுள் கொடுத்த வரங்களையும், அழைப்புகளையும் அறிந்து கொள்ளுங்கள். வெளியே வேலைக்குச் செல்லதான் கடவுள் உங்களுக்குப் பயிற்சியும் வரங்களும் அளித்தாரா? அப்படியானால், அவர் உங்களை நம்பி ஒப்படைத்ததை பொறுப்புக்களை கவனமாகச் செய்யுங்கள்.

- நீங்கள் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று அறிந்து கொள்ளுங்கள். பணியிடத்தில் ஒன்றைச் சாதிக்க வேண்டும் என்று உங்கள் இருதயம் வாஞ்சிக்கலாம். அதை செய்யக்கூடிய திறமையும் உங்களுக்கு வரமாகக் கொடுக்கப்பட்டிருக்கலாம். அதேநேரத்தில், கொஞ்ச காலத்திற்கு உங்கள் முன்னுரிமைகள் உங்கள் பிள்ளைகள் மீது இருக்கும். குறிப்பாக அவர்கள் சிறுபிள்ளைகளாக இருந்தால், உங்கள் வாழ்வின் அந்த பகுதியை பணிக்கு செல்வதை விட்டு, உங்கள் குழந்தைகளுக்காக தியாகம் செய்ய நீங்கள் அதைத் தேர்வு செய்யலாம்.
- உங்களால் செய்ய முடியும் பொறுப்புக்களை நன்கு தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள், ஏனெனில், நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு திறன்களைக் கொண்டிருக்கிறோம். உங்களின் திறண்கள் எவைகள், எந்த எந்த பொறுப்புக்களை எந்த அளவு செய்ய முடியும் என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். ஒரு தாயாய், மனைவியாய் அல்லது இல்லத்தரசியாய் இருந்துகொண்டு வெளியே வேலை செய்வது ஒரு பெண்ணுக்கு மிகவும் சவாலானதாக இருக்கும். அவற்றையெல்லாம் சேர்த்து சமாளிக்கூடிய திறன் உங்களிடம் இருந்தால், அதற்குச் செல்லுங்கள்! இல்லையெனில், உங்களால் எது முடியுமோ அதை மட்டும் செய்யத் தீர்மானியுங்கள்!

நீங்கள் வெளியே வேலைக்குச் செல்ல அழைக்கப்பட்டால், குற்ற உணர்ச்சி வேண்டாம். ஏனென்றால் கடவுள் உங்களுக்கு அதைச் செய்ய கிருபை கொடுத்திருக்கிறார். அதாவது நீங்கள் பணியிடத்தில் இருக்க அவர் விரும்புகிறார். எனவே, அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். ஒருவேளை நீங்கள் இல்லத்தரசியாய் இருக்க அழைக்கப்பட்டால், எனக்கு ‘மேலாளர்‘ அல்லது ‘தலைமை நிர்வாக அதிகாரி‘ போன்ற பொறுப்புக் கிடைக்கவில்லையே என்ற தாழ்வு எண்ணம் கொள்ள வேண்டாம். உங்களுக்கான பொறுப்பு, மனைவி மற்றும் தாய் மட்டுமே. ஆனால் உங்கள் முதல் அன்புக்குறிய கடவுளையும் உங்கள் முதன்மை அழைப்பையும் தழுவினால், உங்களுக்கான வெகுமதி மிகச் சிறந்ததாக இருக்கும். அவர் இதைத்தான் உங்களிடம் கேட்கிறார். அவ்வளவுதான். நினைவில் கொள்ளுங்கள், கடவுள் உங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் எதிர்பார்க்கும் அவரின் தனிப்பட்ட அழைப்பையும் அவருடைய விருப்பத்தையும் நீங்கள் நிறைவேற்ற வேண்டும்.

## இதின் அடிப்படையில் உங்கள் கருத்து என்ன?

1. ஒரு பெண் தனது அடையாளத்தைக் கடவுளிடமிருந்து பெற்று, தன் வாழ்வில் முன்னேறிச் செல்ல, எவையெவைகளைச் செய்ய வேண்டும்?

# 3. பணியிடங்களில் சந்திக்கும் சவால்களை பெண்கள் எவ்வாறு கையாள்கிறார்கள்?

## மன அழுத்தம்

இந்த பகுதி ஆண்கள் மற்றும் பெண்கள் இருவருக்கும் பொருந்தும். நாம் அனைவரும் வீட்டிலும் பணியிடத்திலும் பொறுப்புகளை ஏற்றதிலிருந்து மன அழுத்தத்தை அனுபவிக்கிறோம். என்னை எடுத்துக் கொள்ளுங்கள், நான் சபை மற்றும் எனது வீட்டை நிர்வகிக்க வேண்டியதை பார்க்கும்போது, எனக்கு வேலையிலும் மனதிலும் ஏற்படும் அழுத்தத்தை சமாளிப்பதற்கும் அதிலிருந்து விடுபடுவதற்கும் எனக்கு உதவியவைகள் இரண்டு:

- கர்த்தரை சார்ந்திருப்பதற்கு கற்று கொள்ளுதல்

**ஏசாயா 26:3**
**உம்மை உறுதியாய்ப் பற்றிக்கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.**

"பிரச்சனையான சூழ்நிலைகள்" இருப்பதை மறுக்காமல்–அவைகளின் மீது நம் மனதை வைப்பதற்கு பதிலாக - அவைகளை விட பெரிய கடவுள் மீது நம் மனதை வைக்க வேண்டும். அவர் புயல்களுக்கு மேலே இருக்கும் ராஜா, எனவே அலைகள் மற்றும் புயல்களின் மீது உங்கள் பார்வை இராமல், அவைகளுக்கு மேலே வீற்றிருக்கும் ராஜாவைப் நாம் பார்க்கும்போது, அவர் நம்மை சமாதானத்துடன் வைத்திருப்பார். சில நேரங்களில் நான் என் பொறுமையை இழந்து ஆத்திரமடைகிறேன், ஆனால் நான் அந்த நிலையிலேயே அதிக நேரம் இருப்பதில்லை. நான் அதிலிருந்து என்னை இழுத்து புயல்களுக்கு மேலே வீற்றிருக்கும் கர்த்தர் மீது என் மனதை மையம் கொள்ள வைக்கிறேன்.

- கடவுளின் வார்த்தையில் தியானமாய் இருக்க கற்றுக்கொள்ளுதல்

கடவுளின் வார்த்தையில் தியானமாய் இருப்பது மன அழுத்தத்தைப் போக்கும் ஒரு சிறந்த மருந்து. ஒரு குறிப்பிட்ட பகுதி உங்களுக்கு மிகுந்த மன அழுத்தத்தையும் தொந்தரவையும் ஏற்படுத்தினால், அந்த சூழ்நிலையைப் பற்றி கடவுளுடைய வார்த்தையில் என்ன சொல்லியிருக்கிறது என்று தியானியுங்கள், நீங்கள் அதைச் செய்யும்போது, அது பயத்திற்குப் பதிலாக விசுவாசத்தை உங்களுக்கு கொடுக்கும். பயம் மன அழுத்தத்தை உருவாக்குகிறது. விசுவாசம் நம்பிக்கையை உருவாக்குகிறது, சமாதானத்துடன் ஓய்வெடுக்க உங்களுக்கு உதவுகிறது.

# போட்டி

- ஆரோக்கியமான போட்டி ஒரு நல்ல விஷயம்

ஒரு உதாரணத்திற்கு, நீங்கள் 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஓடுகிறீர்கள் என வைத்துக்கொண்டால், நீங்கள் மறுபடி பிறந்து, ஆவியில் நிறைந்து, அன்னியபாஷை பேசி, பிசாசுகைத் துரத்தும் சக்தி அனைத்தும் பெற்ற கிறிஸ்தவராக இருந்தாலும், ஒரு ஓட்டப்பந்தயம் என வந்தால், அதில் மற்ற போட்டியாளர்களுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு ஒரு போதும் ஓட முடியாது! பந்தயத்தின் இறுதிக்கோட்டை தொட துவக்கத்திலிருந்து இறுதி வரை உங்களின் முழு சக்தியையும் கொடுக்க வேண்டும். இப்படியான ஆரோக்கியமான போட்டி நமக்குள் உள்ள சிறப்பை வெளிக்கொண்டு வருகிறது. அதேபோல், பணியிடத்தில் நீங்கள் போட்டி போட்டு வேலை செய்வது நல்லதுதான். ஆனால் அது சரியான போட்டியாக, உங்களுக்கான பரிசுப்பொருளைக் கடவுளிடமிருந்து எதிர்பார்த்த போட்டியாக இருக்க வேண்டும்.

**கொலோசெயர் 3:22-24**
**22 வேலைக்காரர்களே! எல்லா சூழ்நிலைகளிலும், உங்கள் எஜமான்/முதலாளி சொல்லுகிறவைகளுக்கு கீழ்படிந்து வேலைகளைச் செய்யுங்கள். அவர்களிடம் நல்ல வேலைக்காரன் என்று பெயர் எடுக்க நினைத்து, அவர்கள் கவனிக்கும்பொழுது மட்டும் நன்றாகவும், கவனிக்காதபொழுது ஏனோதானோவென்றும் வேலைசெய்யாமல், கடவுள் உங்களை கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நினைவில்வைத்து, எப்பொழுதும் கவனமாக வேலை செய்யுங்கள்.**

**23 ஆகவே, நீங்கள் என்ன வேலை செய்தாலும், அதை ஒரு மனிதனுக்கு செய்வதாக நினைக்காமல், இயேசு இராஜாவுக்குச் செய்வதாக நினைத்து, முழுமனதோடு செய்யுங்கள்.**
**24 ஏனெனில், எல்லோருக்கும் முதலாளியாகிய கடவுள் வாக்குக் கொடுத்ததை, நாம் செய்த செயலுக்குத்தக்க பலனாக இயேசு இராஜாவிடமிருந்து பெறப்போகிறோம் என்பதை நினைவில் வைத்து முழுமனதோடு உங்கள் வேலைகள் எல்லாவற்றையும் செய்யுங்கள். பணியிடத்தில் நேர்மை மற்றும் ஒழுக்கம் தவராமல் போட்டியிடுவதில் தவறில்லை. நேர்மை எந்த எதிர்ப்பையும் எதிர்கொள்ளும்!**

## ஆண் பெண் பாகுபாடும், ஆணின் ஆதிக்கமும்

பல நிறுவனங்களில் மற்றும் அமைப்புகளில் ஆண்களை மட்டுமே முன்னிலை படுத்தும் எழுதப்படாத சட்டம் உள்ளது. பல பெண்கள் இந்த பாகுபாடுகளை அனுபவிக்கலாம். மேலும், ஒரு ஆணுக்கு நிகராக ஒரே பதவியில் உள்ள ஒரு பெண்ணுக்கு அந்த ஆணைவிட ஊதியம் குறைவாக இருக்கலாம். நீங்கள் அத்தகைய சூழ்நிலையில் இருந்தால், அதற்காக சண்டையிட வேண்டாம். கடவுளை நோக்கிபார்த்து, பதவி உயர்வு அவரிடமிருந்து வருகிறது என்பதையும், உங்கள் கைகளின் வேலையை கடவுளால் ஆசீர்வதிக்க முடியும் என்பதையும் நினைவில் வையுங்கள். உங்கள் வழியில் இடையூரை ஏற்படுத்தும் அந்த நபரை விலக்கி உங்களை பதவி உயர்வுக்கு கொண்டுவர அவருக்குத் தெரியும்.

**சங்கீதம் 75:6-7**
**6 கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது.**
**7 தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார்.**

## பாலியல் அத்துமீறல்

உங்கள் முதலாளிக்கு நீங்கள் பாலியல் ரீதியாக ஒத்துழைப்பு அளிக்காவிட்டால், பதவி உயர்வு பெற வாய்ப்பில்லை என்ற சூழ்நிலையை நீங்கள் சந்திக்கிறீர்களா? அந்த மாதிரியான அழுத்தங்கள் உள்ள வேளையில், உங்கள் தலையை உயர்த்தி நிமிர்ந்து நின்று “இல்லை! முடியாது” என்று சொல்லுங்கள். அதற்கு பணியவோ, சமரசம் செய்யவோ வேண்டாம். தூய்மையாக இருங்கள். சுத்தமாக இருங்கள். திருமணமானவர்கள், எந்த சூழ்நிலை வந்தாலும், உங்கள் கணவருக்கு உண்மையாக இருங்கள்.

- உங்களை பணியிடத்தில் காக்கிறவர் நம் கடவுள்

**சங்கீதம் 3:3**
**ஆனாலும் கர்த்தாவே, நீர் என் கேடகமும், என் மகிமையும், என் தலையை உயர்த்துகிறவருமாயிருக்கிறீர்.**

**சங்கீதம் 27:1**
**கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?**

- அடக்கத்துடன் உடை அணியுங்கள், பிறர் பரிந்துரைக்கும் ஆடைகளை அணிய வேண்டாம், கண்ணியமாக உங்களை வெளிப்படுத்துங்கள்.

**தீத்து 2:4-5**
**4 மேலும் அவர்கள் வாழ்வு இளம் பெண்களுக்கு மாதிரியாய் இருக்கும்படி புத்திசொல்லு. எப்படியென்றால், நல்லது எது? கெட்டது? என்பதை அவர்கள் புரிந்து, தங்கள் வாழ்வை சுத்தமாக காத்துக்கொள்ளவும், தங்கள் கணவனையும், பிள்ளைகளையும் நேசித்து, தங்கள் குடும்பத்தார்களை நன்கு கவனிக்கத்தக்கதாகவும், பெண்கள் தங்கள் கணவன்மார்களை நேசித்து, கணவன்மார்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வாழவும், நாம் சொல்லிக் கொடுக்கிறபடி கடவுளைப் பற்றிய உண்மைகளின்படி அவர்கள் தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ளவும் புத்திசொல்லு.**
**5 இல்லையென்றால், மற்றவர்கள் அவர்கள் வாழ்வைப் பார்த்து நாம் சொல்லிக்கொடுக்கும் கடவுளுடைய உண்மைகளை ஏளனம் செய்யக்கூடும்.**

## தொழிலை தேர்வு செய்தல்

சில பெண்கள் நிகழ்ச்சி மேலாண்மை, பொழுதுபோக்கு, பேஷன் டிசைனிங் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். இந்த மாதிரியான தொழில்களைச் சுற்றி பாவம் இருப்பதால் நீங்கள் இத்தகைய தொழில்கள் வேண்டாம் என அதிலிருந்து ஓட வேண்டியதில்லை. நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், கிட்டத்தட்ட எல்லா தொழில்களிலும், நிறுவனங்களிலும் தீமைகள் உண்டு! இயேசு நமக்காக கடவுளிடம் வேண்டுதல் செய்யும்பொழுது, இந்த உலகில் இருந்து எடுத்துக்கொள்ளும்படி கேட்காமல், தீமைகளுக்கு விலக்கிக் காத்துக்கொள்டும்படியே கேட்டார். ஆகவே, எதிலிருந்தும் ஓடாதீர்கள். இருப்பினும், கீழ்கண்ட கொள்கையை உங்கள் தொழிலில், வேலை செய்யும் இடங்களில் பயன்படுத்துங்கள்:

**யோவான் 17:14-18**
**14 ஏனெனில், இந்த உலகத்தைப் பிரதானமாக நினைத்து வாழ்கிற மக்களைப் போல நான் எப்படி வாழவில்லையோ, அதுபோலவே இவர்களும் வாழவில்லை; ஆகவேதான், இந்த உலக வாழ்வை பிரதானமாக நினைத்து வாழ்கிற மக்கள், இவர்களை வெறுக்கிறார்கள்.**
**15 ஆகவே, இவர்களையும் இந்த உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று நான் உங்களிடம் வேண்டுதல் செய்யாமல், இவர்களை அழிக்க நினைக்கிற**

**கெட்ட சக்திகளிடமிருந்து இவர்களைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.**
**16 நான் எப்படி இந்த உலக வாழ்வைப் பிரதானமாக நினைத்து வாழவில்லையோ, அதுபோலவே இவர்களும் இந்த உலக வாழ்வைப் பிரதானமாக நினைத்து வாழவில்லை.**
**17 நீங்கள் பேசுவதெல்லாம் உண்மையாகையால், உங்கள் உண்மையினாலே அவர்களைச் சுத்தமுள்ளவர்களாக வாழவையுங்கள்.**
**18 ஏனெனில், இந்த உலகத்தில் வாழ நீங்கள் எப்படி என்னை இங்கு அனுப்பினீர்களோ, அதுபோலவே நானும் அவர்களை அனுப்புகிறேன்.**

உங்களின் விசுவாசம், நன்நடத்தை, நற்பண்பு, நல்லொழுக்கம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றில் சமரசம் செய்ய உங்கள் தொழிலோ, நீங்கள் வேலை செய்கிற இடமோ உங்களைத் தூண்டினால், நீங்கள் அந்த பதவியிலிருந்து உங்களை விலக்கிக்கொண்டு, வேறொரு வேலையை அல்லது தொழிலைத் தேடுங்கள். இயேசுவுக்காகவும் உங்கள் நல்ல கொள்கைக்காகவும் துணிந்து நில்லுங்கள். ஒரு வித்தியாசத்தை உண்டாக்குங்கள். உங்கள் நிறுவனத்தில் நீங்கள் இதுபோன்ற மாற்றங்களைக் கொண்டுவர துவக்கமாக இருங்கள் .

மக்கள் கூட்டம் எங்கு இருக்கிறதோ அங்கு தான் கடவுளுக்கு நீங்கள் தேவை. ஏனென்றால், அவர்களிடம் உங்கள் குரல் மூலமாக பேசுவதற்கு, அவர்களை உங்கள் கைகளால் தொடுவதற்கும் மற்றும் தன் அன்பை உங்கள் மூலம் அவர்களிடம் வெளிப்படுத்தி காட்ட நீங்கள் அவருக்கு அங்கு தேவை. எனவே, சூழலும் களமும் தார்மீக ரீதியாக சவாலானதாக இருந்தாலும், நீங்கள் அங்கேயே இருந்து ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துங்கள். இருப்பினும், அத்தகைய களத்தில் உங்களால் மற்றவர்கள் கவரப்பட வேண்டுமே அன்றி மற்றவர்களால் நீங்கள் கவரப்படாமல் உங்கள் ஆவிக்குறிய வாழ்வில் உங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## இதின் அடிப்படையில் உங்கள் கருத்து என்ன?

1. ஒரு பெண்ணாக, நீங்கள் வேலை செய்யும் இடத்தில் இதுபோன்ற பொதுவான சவால்களை நீங்கள் எவ்வாறு சமாளிப்பீர்கள் என சிந்திக்கவும்.

# 4. கணவன், மனைவி இருவரும் சம்பாதிக்கும் குடும்பங்களில் உள்ள பிரச்சனைகளும், அவைகளை தவிர்த்தலும்

**கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால் குடும்பங்களில் நேரிடும் பிரச்சனைகளும், சிக்கல்களும்**

## பிரச்சனைகளும், சிக்கல்களும்

### ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதற்குப் பதிலாக தனித்துச் செயல்படுதல்

கணவனுக்கும் மனைவிக்கும் தனிப்பட்ட வங்கிக் கணக்குகள், வாகனங்கள், கடன் அட்டைகள் மற்றும் இன்னும் பலவற்றைக் கொண்டிருக்கும்போது, அவர்கள் ஒருவரையொருவர் சார்ந்து வாழ்வதற்குப் பதிலாக மிகவும் சுதந்திரமாக தனித் தனியாகச் செயல்படுகிறார்கள்.

### கணவன் மனைவிக்கு இடையிலான போட்டி

ஒரே தொழிலில் பணிபுரியும் தகுதிநிறைந்த கணவனும் மனைவியும் அவர்களுடைய சம்பளம் மற்றும் பதவிகளை ஒப்பிட்டுப்பார்த்து போட்டியிடத் தொடங்கலாம்.

### பணியிடத்தை திருமணம் செய்கிறவர்கள்

சில கணவன்மார்கள் திருமணத்தின் போது “நான் உன்னோடேயே இருப்பேன்” என்று போதகர் முன்பு, வாக்குறுதி கொடுத்திருப்பார்கள். ஆனால், மறுநாள் “நான் வேலையும் செய்கிறேன்” என்று பணியிடத்திற்குக் கிளம்புகிறார்கள். அவர்கள் தங்களின் அதிக நேரத்தை வேலையில் செலவழித்து, தங்கள் பணியிடங்களையே திருமணம் செய்து கொண்டது போன்று வாழ்கிறார்கள்!

### அதிக பணம் ஆனால் குறைந்த நேரம்

குடும்பத்தில் முக்கியமான விஷயங்களை ஒன்றாக இணைந்து செய்ய அதிக பணம் வேண்டுமா? அல்லது அதிக நேரம் வேண்டுமா? என்பதை, கணவனும் மனைவியும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டும். பணத்தால் ஒருபோதும் வாங்க முடியாத சில விஷயங்கள் உள்ளன. பணத்தால் ஒரு அற்புதமான கணவனையோ, மனைவியையோ அல்லது சிறந்த பிள்ளைகளையோ வாங்க முடியாது. ஒன்றாக நேரத்தை செலவிடுவதன் மூலம் குடும்பத்தில் ஒரு நல்ல பந்தம் கட்டமைக்கப்படுகிறது. மற்றும் குழந்தைகள் ஒழுங்காக கற்பிக்கப்படுகிறார்கள், வளர்க்கப்படுகிறார்கள், பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

### அளவுக்கு அதிகமாக வேலை செய்யும் பெண்கள்

இரண்டு சம்பளங்கள் வாங்கும் குடும்பத்தில், பெரும்பாலும் அந்தப் பெண் வீட்டிலும் வெளியேயும் வேலைசெய்து முடிக்கும்போது, அதிக வேலைபழு காரணமாக வாழ்க்கையில் உடைந்துபோய்விடுகிறாள். கணவன், மனைவி இருவரும் பணியில் ஈடுபடும்போது, கணவரும் கணிசமான அளவு வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும். இதனால் அவரது மனைவி அதிக சுமையிலிருந்து தப்புவாள்.

## இரண்டு சம்பளங்கள் பெறும் குடும்பங்களுக்கான செயல்பாட்டு திட்டங்கள்

### எதற்கு உண்மையான மதிப்புக் கொடுக்கவேண்டும் என்று புரிந்து கொள்ளுங்கள்

நீங்கள் உலகம் முழுவதையும் சம்பாதித்து, உங்கள் வீடு, குடும்பம் மற்றும் குழந்தைகளை இழந்தால், நீங்கள் உண்மையான மதிப்புமிக்கதை இழந்துவிட்டீர்கள். நம்முடைய நாட்களில் மிகவும் போற்றப்பட்ட தொழிலதிபர்களில் பலர் விவாகரத்து பெற்றவர்கள்; இரண்டாவது மற்றும் மூன்றாவது திருமணங்கள் செய்தவர்கள். அவர்கள் அந்த தொழில் துறையையேகூட வெகுவாக முன்னேற்றியிருக்கலாம், பெரிய பெரிய நிறுவனங்களை உருவாக்கியிருக்கலாம் மற்றும் உலகப் புகழ் அடைந்திருக்கலாம். ஆனால், அவர்கள் தங்கள் குடும்பங்களை உருவாக்குவதில் தோல்வியடைந்திருக்கிறார்கள். ஒரே ஒரு மனைவியைக் கொண்ட திருமணம் என்று அழைக்கப்படும் அந்த ஒரு "அமைப்பை" அவர்களால் ஏன் நிர்வகிக்க முடியவில்லை என்று ஒருவர் ஆச்சரியப்படுகிறார்! அவர்களால் சொந்த வீடுகளை நிர்வகிக்க முடியவில்லை என்பது வருத்தமளிக்கிறது. எது உண்மையான சொத்து

என்று சரியாக தேர்தெடுங்கள். உலகத்தால் கொண்டாடப்படுவதை விட, ஒரு அருமையான திருமணம் வாழ்வு மற்றும் கடவுளுக்கு பயந்த பிள்ளைகளை பெற்றிருப்பது மேலானது.

## நேரத்தை சரியாக பயன்படுத்த தெளிந்த மனதுடன் முயற்சி செய்யுங்கள்

சவால்களும் அழுத்தங்களும் மிகச் சிறந்தவை என்றாலும், நம்முடைய நேரத்தையும் சக்தியையும் சரியான முறையில் செலவழிக்க, ஒரு தெளிந்த மனமும், நிலையான முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் கடவுளோடான நேரம், வீட்டிற்கான நேரம், மற்றும் பணி செய்யும் நேரம் ஆகியவற்றை நிர்வகிக்க முடியும். என் மனைவி எமி இதை எனக்குத் தொடர்ந்து நினைவூட்டுகிறாள். ஆகவே, இதை எப்போதும் கட்டுப்பாடுகளோடு கடைப்பிடிக்க முயற்சிக்கிறேன்.

## கணவன் மனைவி இருவரும் இணைந்து, சக்தியை உருவாக்குங்கள்

**பிரசங்கி 4:9-12**
**9 ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்; அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும்.**
**10 ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே.**
**11 இரண்டுபேராய்ப் படுத்துக்கொண்டிருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும்; ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடுண்டாவது எப்படி?**
**12 ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது.**

இருவரின் சக்தி ஒன்றாகும்போது, வலிமை பலமடங்கு அதிகரிக்கிறது. இரு மடங்கு அதிகமாக நாம்மால் சாதிக்க முடிகிறது. எல்லா பகுதிகளிலும் கணவன் மனைவி ஒன்றாக வர முடியுமானால், தனியாக முயல்வதை விட ஒன்றாகச் சேர்ந்து செய்யும்போது இன்னும் பலவற்றைச் சாதிக்க முடியும். இன்னும் அதிகமான உயரங்களை தொடமுடியும். குறிப்பாக வெளியில் பணிக்கு செல்லும் மனைவி இருக்கும் போது, கணவன்மார்கள் வீட்டிலேயும் தங்கள் பொறுப்புக்களை நிறைவேற்றக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எங்கள் சொந்த வாழ்க்கையில், என் மனைவி எமி ஒரு மருத்துவராகப் பயிற்சிபெற்றவள். அவள் தனது முதுகலைப் பட்டத்திற்காக படித்துக்கொண்டிருந்தபோது, எங்கள் குழந்தைகள் போதுமான வயதை எட்டும் வரை தனது படிப்பை நிறுத்தி வைக்க வேண்டுமென்று தானாகவே தீர்மானித்தாள். இது எளிதானதாக இல்லை, உண்மையில் சில நேரங்களில்

மிகவும் வேதனையானது. எப்படியோ, இரண்டு குழந்தைகளும் பள்ளிக்குச் செல்ல துவங்கிய போது, எமி படிப்படியாக திரும்பவும் தனது பணிக்குச் செல்ல முடிந்தது. அவளின் பணியில் தனது பங்கை சரியாக செய்துமுடிக்கவும், தேவைப்பட்டால் தன் குழந்தைகளுக்காக அதை தியாகம் செய்வதிலும் முழுமையாக உறுதியாய் இருந்தாள்.

## இதின் அடிப்படையில் உங்கள் கருத்து என்ன?

1. கணவன் மனைவி இருவரும் சம்பாதிக்கும் குடும்பங்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சனைகள் மற்றும் சிக்கல்களைத் தவிர்க்க நீங்கள் எடுக்கும் தீர்மானங்கள் என்னென்ன?

# **ஆல் பீபிள்ஸ் சர்ச்** பங்காளர்களே

ஆல் பீபிள்ஸ் சர்சின் ஊழியர்கள் உள்ளூர் திருச்சபை என்ற எல்லையை கடந்து இந்தியா முழுவதையும், குறிப்பாக வட இந்தியா முழுவதையும் சென்றடைந்துள்ளனர். அவர்களின் முக்கிய நோக்கம், (அ)தலைவர்களை பலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களுக்கு ஊழியத்தில் விருப்பம் ஏற்படச் செய்தல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தை கட்டமைத்தல். மேலும் இளைஞர்களுக்கான பயிற்சி கருத்தரங்குகள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கான மாநாடுகள் ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. கூடுதலாக, பல ஆயிரம் புத்தகங்களின் பிரதிகள் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன, இது, வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகள் வளர உதவுகிறது.

ஒரு முறை உதவி அல்லது மாதாந்திர நிதி உதவி அனுப்புவதன் மூலம் நிதி ரீதியாக எங்களுடன் பங்காளராக உங்களை அழைக்கிறோம். நாடு முழுவதும் நாங்கள் செய்யும் இந்த வேலையில் எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பக்கூடிய எந்தத் தொகையும் பெரிதும் மதிக்கப்படும். உங்கள் உதவியை "ஆல் பீபிள்ஸ் சர்ச்" க்கு செலுத்த வேண்டியதை காசோலை / வங்கி வரைவு காசோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். எங்கள் வங்கி கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கி பரிமாற்றத்தின் ஊடாக உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**கணக்கு பெயர்: All peoples church**
**கணக்கு எண்: 0057213809**
**IFSC குறியீடு: CITI0000004**
**வங்கி:** சிட்டி வங்கி என்.ஏ., எண் 5, எம்.ஜி. சாலை, பெங்களூரு, கர்நாடகா **560001**

தயவுசெய்து கவனிக்கவும்: இந்தியாவை தளமாக கொண்ட வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஆல் பீபிள்ஸ் சர்ச்சால் ஏற்றுக்கொள்ள முடியும். உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, நீங்கள் விரும்பினால், உங்கள் பங்களிப்பு குறிப்பிட்ட எந்த APC ஊழிய பகுதிக்கு அல்லது இடத்திற்கு பயன்படுத்தப்பட விரும்புகிறீர்கள் என்பதை குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு apcwo.org/give என்ற இணையப் பக்கத்தை பார்வையிடவும்

மேலும், எப்போதுதெல்லாம் உங்களால் முடியுமோ எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்துக்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள். நன்றி, கடவுள் உங்களை ஆசீர்வாதிப்பாராக!

# இலவச வெளியீடுகள்

A Church in Revival*
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks*
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change*
Code of Honor
Divine Favor*
Divine Order in the Citywide Church
Don’t Compromise Your Calling*
Don’t Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God’s Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God*
God Is a Good God
God’s Word
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife*
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses-Don’t Take Them
Open Heavens*
Our Redemption
Receiving God’s Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith *
The Conquest of the Mind
The Father’s Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus *
The Night Seasons of Life
The Power of Commitment*
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner’s Fire
The Spirit of Wisdom, Revelation and Power*
The Wonderful Benefits of speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different*
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து புத்தகங்களும் இலவசமாக PDF -ஆக தரவிறக்கம் செய்ய எமது திருச்சபை வலைத்தளமான **apcwo.org/books** பார்க்கவும். இந்த வெளியீடுகள் வேறுபல மொழிகளிலும் உள்ளன. இவைகளை புத்தகவடிவில் இலவசமாகப் பெற எமது மின்னஞ்சல் அல்லது அஞ்சல் முகவரிக்குத் தொடர்புகொள்ளவும்.

எமது திருச்சபை வலைத்தளம் **apcwo.org**-ல் இலவச ஒலி, ஒளி வடிவில் பிரசங்கங்களைக் கேட்கலாம், பிரசங்க குறிப்புகளைப் படிக்கலாம், டெலிவிஷன் நிகழ்ச்சிகள், மேலும் பலவைகளால் நீங்கள் பயனடையலாம்.

# ஆல் பீப்புள் சர்ச்சைப் பற்றி

ஆல் பீப்புள் சர்ச்சின் தரிசனம் பெங்களூர் பெருநகரத்திற்கு உப்பாக, ஒளியாக திகழவேண்டும் என்பதும், இந்திய தேசத்திற்கும், மற்ற தேசங்களுக்கும் கிறிஸ்துவைப் பற்றி குரல் எழுப்ப வேண்டும் என்பதாகும்.

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடும், வெளிப்பாடுகளோடும் கடவுளுடைய வார்த்தையில் எந்தக்கலப்படமும் இல்லாமல், முழுமையாக அதை மக்களுக்குச் சொல்லும் அர்ப்பணிப்போடு ஆல் பீப்புள் சர்ச் செயல்பட்டுவருகிறது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு, அற்புதங்கள், அதிசயங்கள், அடையாளங்கள், ஆவியின் வரங்கள் மூலம் கடவுளுடைய வார்த்தையை மக்களுக்கு அறிவிப்பதற்கு மாற்றாக, நல்ல இசையோ, புதுபுதுத் திறமைகளைக் காட்டி அறிவிப்பதோ, திறமையாகப் பேசுவதோ, நவீன கால ஊழிய உத்திகளோ மாற்றாக இருக்க முடியாது என்பது எங்கள் நம்பிக்கை (1 கொரி. 2:4-5; எபிரே. 2:3-4). எங்கள் கருப்பொருள் இயேசு கிறிஸ்து. மக்களுக்கு ஊழியம் செய்வது எங்கள் தலையாய நோக்கம், கிறிஸ்துவைப் போல வளர்ச்சியடைவதே எங்கள் நோக்கம்.

பெங்களூரை மைய்யமாகக்கொண்ட ஆல் பீப்புள் சர்ச்சிற்கு இந்தியாவின் பல இடங்களில் கிளை சபைகள் உள்ளது. தற்போது எங்கெங்கே கிளை சபைகள் உள்ளது என்பதை அறிய **www.apcwo.org/locations** என்ற வலைத்தளத்திலோ, **contact@apcwo.org** என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புவது மூலமாகவோ தெரிந்துகொள்ளலாம்.

# கடவுள் உங்களை நேசிக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு, கடவுள் இவ்வுலகிற்கு ஒரு மனிதனாக வந்தார். அவர் பெயர் “இயேசு”. அவர் ஒரு பாவமும் செய்யாத ஒரு பரிபூரண வாழ்க்கை வாழ்ந்தார். இயேசு என்ற பெயரில், கடவுள் ஒரு மனித உடலில் வாழ்ந்தபடியால், அவர் சொன்னது, செய்தது அனைத்தும் கடவுள் எப்படிப்பட்டவர்? என்பதை நமக்குக் காட்டியது. அவர் பேசிய வார்த்தைகள் அனைத்தும், கடவுள் பேசிய வார்த்தைகளாகும். அவர் செய்தவைகள் அனைத்தும், கடவுள் செய்த செயல்களாகும். இந்தப்புவியிலே, இயேசு அனேக அற்புதங்களைச் செய்தார். கஷ்டகளில், வியாதிகளிலிருந்து அனேகரை அவர் குணப்படுத்தினார். குருடான கண்களைப் பார்க்கச் செய்தார்; கேட்க இயலா செவிகளைக் கேட்கச் செய்தார்; நடக்க இயலா கால்களை நடக்கச் செய்தார்; அனைத்துவித வியாதிகளையும் குணமாக்கினார். பசியோடிருந்த ஆயிரமாயிரமானவர்களுக்கு, அற்புதமாக ரொட்டியைப் பெருகச் செய்து, வயிறார சாப்பிட செய்தார்; புயலை அடக்கினார் இவ்வாறாக அனேக ஆச்சரியமான காரியங்களைச் செய்தார்.

அவர் செய்த அனைத்து செயல்களுமே, கடவுள் நல்ல கடவுள் என்பதை நாம் புரிந்துகொள்ளச் செய்கிறது. மக்கள் நன்றாக, சுகமாக, சந்தோசமாக வாழவேண்டும் என்பதே கடவுளுடைய விரும்பம் என்பதையும் புரிந்துகொள்ளச் செய்தார். மனிதர்களுடைய தேவைகளை நிவிர்த்திசெய்வதே அவருடைய விருப்பமாகும்.

அப்படியென்றால், கடவுள் ஏன் மனிதனாக மாறி இவ்வுலகிற்கு வரவேண்டும்? இயேசு ஏன் இவ்வுலகில் வாழ வேண்டும்?

மனிதர்களாகிய நாம் அனைவரும் நம்மைப் படைத்த கடவுளுக்குப் பிடிக்காதவைகளைச் செய்து பாவிகளாகிப்போனோம். பாவத்திற்கான எதிர் விளைவுகளும் உள்ளது. கடவுளுக்கும், நமக்கும் இடையில் பாவமானது தொடர்புகொள்ள இயலாத் தடையாக இருக்கிறது. இவ்வாறாக, பாவம் நம்மையும், கடவுளையும் பிரிக்கிறது. பாவம், நம்மைப் படைத்த கடவுளோடு நாம் தொடர்புகொள்ள இயலாது, நாம்மால் அவரைப் புரிந்துகொள்ள இயலாது தடுக்கிறது. ஆகவே, அனேகர்கள் இந்தக் குறையைத் தீர்க்க வேறுபல வழிகளில் முயற்சி செய்கிறார்கள்.

பாவத்தினுடைய மற்றொரு விளைவு, நித்தியமாக கடவுளைவிட்டுப் பிரிந்து வாழ்வதாகும். கடவுளுடைய நீதிமன்றத்திலே, பாவத்திற்கான தண்டனை, மரணமாகும். மரணம் என்றால் நித்தியமாக அவரைப் பிரிந்து நரகத்தில் வாழ்வதாகும்.

ஆனால், நல்ல செய்தி என்பது, நாம் அந்த பாவத்திலிருந்து விடுபட்டு, கடவுளோடு தொடர்புகொண்டு அவரோடு சேர்ந்து வாழ இயலும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, “பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்” (ரோமர் 6:23). இயேசு சிலுவையில் மரிக்கும்பொழுது, இவ்வுலகின் பாவங்கள் அனைத்திற்குமான விலைக்கிரயத்தை செலுத்திவிட்டார். பின்பு, அவர் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்திருக்கும்பொழுது, அவர் உயிரோடு இருக்கிறதை அனேகருக்கு காண்பித்து, பின்பு மீண்டும் பரலோகம் செல்கிறார்.

கடவுள் அன்பாகவும் இரக்கமாகவும் இருக்கிறார். எந்த மனிதனும் நரகத்திற்குச் செல்லவேண்டும் என அவர் விரும்புவதில்லை. ஆகவே, மனிதர்கள் அனைவரும் பாவத்திலிருந்து விடுபட்டு, பாவத்தின் விளைவுகளிலிருந்து காப்பாற்ற வழி ஏற்படுத்தவே, அவர் இந்த பூமிக்கு வந்தார்.

உங்களையும், என்னையும் போன்ற பாவ மனிதர்களை பாவத்திலிருந்தும், நித்திய அழிவிலிருந்தும் காப்பாற்றவே அவர் இப்புவிக்கு வந்தார்.

உங்கள் பாவத்திற்குரிய மன்னிப்பை இலவசமாக நீங்கள் பெற்றுக்கொள்வதற்கு நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்யவேண்டும் என வேதாகமம் கூறுகிறது. அது என்னவென்றால், நமக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்ததை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்"** (அப்போஸ்தலர் 10:43).

**"என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"** (ரோமர் 10:9).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்காகச் செய்ததை நம்பி, அவரை நீங்கள் ஏற்றுக்கொள்ளும்பொழுது, நீங்கள் உங்கள் பாவத்திற்கு கடவுளிடம் மன்னிப்புப் பெற்று, உங்கள் பாவக்கறைகளிலிருந்து கழுவப்படுகிறீர்கள்.

இயேசு கிறிஸ்து, சிலுவையில் உங்களுக்காக என்ன செய்தார் என்று அவர் மீது உங்களுக்கு நம்பிக்கைவரும் தீர்மானத்தை எடுக்க பின்வரும் மாதிரி ஜெபத்தை நீங்கள் செய்யலாம். இயேசு கிறிஸ்து உங்களுக்காகச் செய்தவைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள், அவருடைய மன்னிப்பையும், பாவக்கறைகளிலிருந்து சுத்திகரிப்பையும் பெற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவலாம். இந்த ஜெபம் நீங்கள் எப்படிச் ஜெபிக்கலாம் என்று உதவுவதற்கேயாகும். அதன்பின்பு, நீங்களே சொந்தமாக ஜெபிக்கலாம்.

என் வாழ்வை ஆளும் இயேசுவே! நீங்கள் சிலுவையில் எனக்காக என்ன செய்தீர்கள் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீங்கள் எனக்காக மரித்தீர்கள். நான் செய்த பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற, உங்களுடைய விலைமதிக்க இயலா இரத்தத்தைச் என் பாவங்களுக்கு விலைக்கிரயமாகச் செலுத்தினீர்கள். உங்களை நம்புகிறவர்களுக்கு, பாவங்களுக்கான மன்னிப்பு கிடைக்கிறது என்று வேதாகமம் கூறுகிறது.

ஆகவே, நீங்கள் எனக்காக சிலுவை மரணத்தின் மூலம் செய்தவைகளையும், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்ததன் மூலம் செய்தவைகளையும் இன்று நான் நம்புகிறேன். நான் என்னதான் நல்ல செயல்களைச் செய்தாலும், என் வாழ்வை என்னால் காப்பாற்ற இயலாது என்பது எனக்குத் தெரியும். உங்களிடம் என் பாவத்திற்கான மன்னிப்பை பெற, என்னால் கொடுப்பதற்கு எதுவுமில்லை என்பதும் எனக்குத் தெரியும்.


நீங்கள் எனக்காக மரித்தீர்கள், என் பாவத்திற்கான விலையைச் செலுத்தினீர்கள்; மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தீர்கள் என்று இன்று நான் மனதார நம்புகிறேன்; இந்த நம்பிக்கையின் மூலம், நீங்கள் என்னை மன்னிக்கிறீர்கள், என் வாழ்வைச் சுத்தமாக்குகிறீர்கள் என்று வாயாற அறிக்கையிடுகிறேன். நன்றி இயேசுவே! உங்களைத்த தொடர்ந்து நேசிக்க உதவுங்கள். உங்களை மேலும் அறிந்து, உங்களுக்கு உண்மையாய் வாழ உதவுங்கள். ஆமென்.

# DOWNLOAD THE FREE APP!

*Search for*
"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play







*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# All Peoples Church Bible College
# apcbiblecollege.org

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீபிள்ஸ் சர்ச் பைபிள் கல்லூரி மற்றும் ஊழிய பயிற்சி மையம் (APC-BC), ஆவியால் நிறைந்து, அபிஷேகம் செய்யப்பட்ட, பரிசுத்த ஆவியின் அற்புத வல்லமையில் ஊழியம் செய்வதற்கான தயார்படுத்தல் மற்றும் மூல உபதேசத்தில் ஆழமான மற்றும் மேதமைத்துவத்தை வெளிப்படுத்தும்படி கடவுளுடைய வார்த்தையைப் படிப்பது. நாங்கள் நம்புவது என்னவென்றால், முழுமையான தேவ மனிதனாக ஒருவரை ஊழியத்திற்கு வளர்த்தெடுப்பது, கடவுளுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்ற செய்வது, மற்றும் அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களை நிகழ்த்துவது - இவை அனைத்தும் கடவுளுடனான நெருக்கமான உறவு மற்றும் பிணைப்பிலிருந்து தான் சாத்தியமாகின்றன என்பது தான்.

APC-BC இல் கூடுதலாக ஆழமான போதனைகள், கடவுளின் அன்பு, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் இருப்பு மற்றும் கடவுளின் அற்புதங்கள் ஆகியவற்றை நிகழ்த்திக்காட்டுவதன் மூலம் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்கள் மற்றும் பெண்கள் தங்கள் வாழ்க்கையில் கடவுளின் அழைப்பை நிறைவேற்ற பயிற்சி அளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று படிப்புகளை வழங்குகிறோம்:

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் ஒரு ஆண்டு சான்றிதழ் (C.Th.)
- இரண்டு ஆண்டு இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் டிப்ளமோ (Dip.Th)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியத்தில் மூன்று ஆண்டு இளங்கலை (B.Th.)

ஒவ்வொரு வாரமும், திங்கள் முதல் வெள்ளி வரை காலை **9:00 மணி** முதல் பிற்பகல் **1 மணி** வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தினமும் வந்து செல்லும் மாணவர்கள், நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் மற்றும் இல்லத்தரசிகள் இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளலாம் மற்றும் பிற்பகல் 1 மணிக்குப் பிறகு உங்கள் அன்றாட பணியைத் தொடரலாம். தங்கி பயில விரும்பும் மாணவர்கள் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனிதனி விடுதி வசதிகள் உள்ளன. வாரம் முழுவதும் ஒவ்வொரு நாளும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை மாணவர்கள் களப்பணி, சிறப்பு கருத்தரங்குகள், பிரார்த்தனை மற்றும் துதிஆராதனை அமர்வுகளில் பங்கேற்கின்றனர். பிற்பகல் அமர்வுகளில் தினம் வந்து செல்லும் மாணவர்கள் (குடியிருப்பு அல்லாத மாணவர்கள்) விரும்பினால் பங்கேற்கலாம், கட்டாயம் அல்ல. அனைத்து மாணவர்களும் வார இறுதி நாட்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளூர் தேவாலயங்களில் சேவையாற்ற நாங்கள் அவர்களை ஊக்குவிக்கிறோம்.

ஆன்லைனில் விண்ணப்பிக்க மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், தகுதிகள், கல்விச் செலவுகள் பற்றி தெரிந்துகொள்ள மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்குவது பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து எங்கள் இணைய பக்கத்தை பார்வையிடவும்: apcbiblecollege.org

APC-BC is accredited by the Nations Association for Theological Accreditation (NATA).

பெண்கள் வெளியே வேலைக்குச் செல்வது சரியானதா? என்று மக்கள் மத்தியில் பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் சரி என்றும், வேறு சிலர் வேலைக்குச் செல்வது சரியில்லையென்றும் சொல்கிறார்கள். சிலர், பெண்கள் வேலைக்குச் செல்லவே கூடாது, வீட்டு வாசலைத் தாண்டக்கூடாது என்று கடினமாகச் சொல்கிறார்கள். தாங்கள் சொல்வதுதான் சரி என்று வேத வசனங்களை மேற்கோள் காட்டுகிறவர்களும் இருக்கிறார்கள்.

கணவனுக்கு மனைவியாக, பிள்ளைகளுக்கு அம்மாவாக, குடும்பத்தைப் பராமரிப்பவளாக இருப்பதே பெண்களின் தலையாய கடமை என்று கடவுளும் வலியுறுத்துகிறார். ஆனால், அவள் ஒரு தொழிலோ, வெளியே வேலைக்குச் செல்லவோ கூடாது என்று அவர் எங்கும் சொல்லவில்லை. கடவுளுடைய வார்த்தைகளை நாம் ஆராய்ந்து பார்க்கும்பொழுது, வீட்டுக்கு வெளியே பல இடங்களில் தேவன் பெண்களைப் பயன்படுத்தியிருப்பதைச் சரித்திரத்தில் காணமுடிகிறது. ஆகவே, பெண்கள் வெளியே வேலைக்கே செல்லக்கூடாது என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. வேதாகம விளக்கக் கோட்பாடுகளின் அடிப்படையில், கடவுள் ஒன்றை எதிர்த்து அல்லது செய்யக் கூடாது என்று நேரடியாகக் குறிப்பிடாவிட்டால், மற்ற வேத வசனங்களின் அடிப்படையில் அதைப்பற்றிய சரியான தீர்மானங்களை எடுக்கலாம் என்றே கடவுள் நமக்குப் போதிக்கிறார்.

பெண்களே மக்கள் எங்கு இருக்கிறார்களோ, அங்கு கடவுளுக்காக நீங்கள் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவர் உங்கள் மூலம் அங்குள்ள மக்களோடு பேச விரும்புகிறார். தன் அன்பை வெளிப்படுத்த விரும்புகிறார். ஆகவே, கடவுள் உங்களை எங்கே வேலை செய்ய வைத்துள்ளாரோ, அங்கே கடவுளுக்காக சிறப்பாக வாழுங்கள், வேலை செய்யுங்கள்.

ஆசீஸ் ராய்சூர்

All people church & world outreach
#319,2nd floor,7th main HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka India

Phone +918025452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org